# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,916—1970 ජූලි 24 වැනි සිකුරාදා—1970.7.24

14,916 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு யூலை மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 617 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 635 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 629 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் . | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. . | 629 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் . | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 634 | நானாவித அறிவித்தல்கள் .. .. . | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவிதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத விதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்—(1) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு ' நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் ' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடிக்க காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.*

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

*☞ எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*அரசாங்க அச்சகப் பகுதி,*
கொழும்பு,
*1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.*

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகன்.*

---

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும், பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

இல. என 51/X. 2255/70

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### நீர்ப்பாசனப் பொறியியலாளர் பதவி

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்திணைக்களத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. எண் 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்முன் கிடைக்கக்கூடியதாயனுப்பி வைத்தல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 7.8.1970.

(ஆ) வெளி நாட்டு விண்ணப்பங்கள் : 14.8.1970.

குறிப்பு.— (i) அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்வோர், 9" × 4" அளவிற்குக் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஓர் கடிதவுறையில் தமது சொந்த முகவரியை எழுதிக் கடிதத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தாரர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலிற் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளி நாட்டிலுள்ள விண்ணப்பதாரர் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிற நாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரர் விரும்பினால் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்குச் சமீபமாயுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பிவைக்கலாம்.

(iv) **மருத்துவப் பரிசோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாவென்பதை உறுதிப்படுத்தும் கருத்துடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்குரிய செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமாகும். விதவையர் அனாதையர் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவு பணம் செலுத்துதல் வேண்டும்.

3. **சம்பளம்.**—பதவிக்குரிய திரட்டிய வேதனத் திட்டம் பின்வருமாறு.—ஆண்டொன்றுக்கு ரூபா 7,800—3 × 360—8,880 × 9,600—4 × 360 உம் 11 × 480—ரூபா 16,320.

(ஆண்டொன்றுக்கு ரூபா 9,600 க்குமுன்னும் 13,920 க்கு முன்னும் வினைத்திறமைகாண் தடையும் உண்டு)

1.10.69 க்கு முன் இருந்த அடிப்படைச் சம்பளத் திட்டம்.—ஆண்டொன்றுக்கு ரூபா 5,160—3 × 360—6,240/6,960—4 × 360 உம் 10 × 480—ரூபா 13,200.

(ஆ) உயர்தொழிற் தகைமையுடைய, அதாவது எம். ஐ. சீ. ஈ. தகைமையுடைய பொறியியலாளர்கள் சேவையில் சேரும்போது ஆண்டொன்றுக்கு ரூபா 9,960 என்ற மேற்கூறப்பட்ட அளவுத்திட்டத்தின் சம்பள முனையில் கணிக்கப்படுவர்.

(இ) ரூபா 9,600 இல் கணிக்கப்பட்ட வினைத்திறமைகாண் தடையைக் கடப்பதற்கு பொறியியலாளர்கள் திணைக்கள நடைமுறைகளிலும், கணக்கிலும், தமிழிலும் (வாய்மொழி) மற்றும் பாடங்களிலும் விதிக்கப்பட்ட பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

குறிப்பு.—உயர்தொழிற் தகைமையுடன் (எம். ஐ. சீ. ஈ.) சேவையில் சேரும் பொறியியலாளர்கள் நியமனத்தன்றிலிருந்து இரு வருடங்களுக்குள் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

(ஈ) மேற்கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தில் ரூபா 13,440 என்ற சம்பள முனையைக் கடப்பதற்கு பொறியியலாளர்கள் உயர் தொழிலுக்குரிய முழுத்தகைமைகளையும் அதாவது எம். ஐ. சீ. ஈ. பெறல் வேண்டும்.

4. **வேண்டிய தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சமர்ப்பிக்கவேண்டிய திருப்திகரமான சான்று, அவர்

(அ) சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 7.8.1970 தேதியில் 21 வயதிற்குட்படாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேல் வயது எல்லை கணிக்கப்படமாட்டாது.)

(இ) இலங்கைக் கலாசாலையில் மேலதிகமாக விரும்பும் நீரியல் பாடத்துடன் குடியியல், எந்திரவியலில் பொறியியல் பட்டம் அல்லது இதற்குச் சமமான அங்கீகரிக்கப்பட்ட பட்டம் அல்லது (லண்டன்) சிவில் எஞ்ஜினியர் நிலையத்தால் நடாத்தப்படும் பரீட்சையில் பகுதி I உம் II உம் சித்தி எய்தல் அல்லது இலங்கை எஞ்ஜினியர் நிலையத்தால் நடாத்தப்படும் சிவில் எஞ்ஜினியர் பரீட்சையில் பகுதிகள் I, I-B, II ஆகியவற்றில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

குறிப்பு.—(1) அவ்வுத்தியோகத்தர் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் சேவை செய்து அனுபவம் பெற்றிருந்தால் எம். ஐ. சீ. ஈ. பகுதி III இன் தகைமைக்கு மதிப்புடையவராவர்.

(2) 1961 ஆம் ஆண்டு கட்டுப்பாடுடைய அரசாங்க சேவைச் சட்ட இல. 70 இன் கீழ் பொறியியலாளர் பதவிகளுக்கு, பொறியியலாளர்களாக நியமனம் செய்யப்பட்டோர் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவார்.

5. விண்ணப்பதாரர் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

(ஆ) பட்டதாரிப் பட்டக்கல்வி அல்லது உயர்தரக் கல்விச் சான்றிதழ்.

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழிநுட்பத் தகைமையும் பற்றிய அல்லது தொழிநுட்பத் தகைமைகள் பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்காரரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவிக்க வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாயனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறிப்பிட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமானவேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர் அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறிப்பிட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத விண்ணப்பகாரரின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக்கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இத்த ஏற்பாட்டின் பிரகாரம் ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தங்கள் விண்ணப்பங்களைக் கவனிக்குமாறு கேட்கும் உரிமையெதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலகம்,
த. பெ. எண். 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 17 ந உ.

7—957/1—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

---

*A49/X2256/70*

## கல்வி அமைச்சு

### மகரகம அரசினர் ஆசிரியர் கலாசாலையில் பொது பாடங்களிலான விரிவுரையாளர்

கல்வி அமைச்சின் கீழுள்ள மகரகம அரசினர் ஆசிரியர் கலாசாலையில் பொதுப் பாடங்களிலான விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, "செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1" என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—7.8.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—14.8.1970.

குறிப்புகள்

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்கும் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந் நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுதற்கு முன் உபகாரச் சம்பளக் குறிப்புகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையவர்களாக ஆசிரியராகப் பதவி வகித்தவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் வகிக்கும் வரை இப்பதவிகள் உபகாரச் சம்பள உரித்துடையனவாகப் பிரகடனஞ் செய்யப்படும்.

3. **சம்பளமும் சகாயப் படிகளும்.**—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ரூ. 7,800—9 × 360 — 11,040 வருடாந்தம்.

4. **தேவைப்படும் தகமைகள்**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டவேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970.8.7 ஆந் திகதியன்று 28 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது).

(ii) வெவ்வேறு பாடங்களுக்குமான தகவுத்திறன் பின்வருமாறு :—

இரசாயனம்
கல்வியும் உடல்நலவியலும்
வர்த்தகம் (கணக்கியல்)
ஆங்கிலம்

அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் பட்டம் பின்னரேனும் வேறு வகையிலேனும் குறைந்தபட்சம் ஒரு கழகவாண்டுக்கு கற்பித்தல் தொழிலில் முழுநேரப் பயிற்சியைச் சித்திகரமாகப் பின்பற்றிய பட்டதாரியாக இருக்க வேண்டும். அபேட்சகர்கள் பட்டம் பெற்றபின் குறைந்தபட்சம் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருப்பதுடன் விண்ணப்பிக்கும் பதவிக்கு அமையும் பாடத்தில் அல்லது பாடங்களில் உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்கவும் வேண்டும்.

**மனையியல்**

மனையியல் தகைமையுடன் பெற்ற பட்டதாரியாக இருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மனையியல் பல்கலைக் கழகத்தில் 2 வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான ஒரு பயிற்சி நெறியைப் பின்பற்றியும் இருக்க வேண்டும். அபேட்சகர்கள் பட்டம் பெற்றபின் ஆகக்குறைந்தது 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**விவசாயம்**

அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக விவசாயப் பட்டதாரியாக இருக்க வேண்டும். பட்டம் பெற்றபின் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள அல்லது விவசாயத்திலும் விலங்கு வேளாண்மையிலும் 3 வருட செயல்முறை அனுபவம் பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(iii) சிங்களத்தில் சிறந்த அறிவு பெற்றிருப்பதுடன் விரிவுரைகளை சிங்களத்தில் நடத்தக்கூடியவராய் இருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுளளது), அதன் கண் அறியுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படுமுன் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1970.7.17.

7—957/2—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

இல : எ. 87/X2257/69

## கல்வி அமைச்சு

### மகரகம அரசினர் ஆசிரியர் கலாசாலைத் துணை அதிபர் பதவி

மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பங்கள் கோரி 9. 2.69 ஆந் திகதிய 14,883 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்குக் கவனம் கோரப்படுகிறது. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி பின்வருமாறு நீடிக்கப்படுகிறது.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 7.8.1970

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 14.8.1970.

2. முந்திய வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க விண்ணப்பித்த அபேட்சகர்கள் திரும்பவும்விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசினர் சேவை ஆணைக்குழு.

அரசினர் சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. எண். 500,
காலி முகச் செயலகம்,கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 17 ந் உ.

7–957/3—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

---

இல. A50/X2258/70

## கல்வி அமைச்சு

### பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலையில் பொதுப் பாடங்களிலான விரிவுரையாளர் பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலையில் பொதுப் பாடங்களிலான விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, " செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 " என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—7.8.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—14.8.1970.

குறிப்புகள் :

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப் பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுதற்குமுன் உபகாரச் சம்பளக் குறிப்புகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையவர்களாக ஆசிரியராகப் பதவி வகித்தவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வகிக்கும் வரை இப்பதவிகள் உபகாரச் சம்பள உரித்துடையனவாகப் பிரகடனஞ் செய்யப்படும்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

ரூ. 7,800 — 9 × 360 — 11,040 வருடாந்தம்.

(குறிப்பு—1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு : ரூ. 5,160 — 9 × 360 — 8,400 வருடாந்தம்).

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின் வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 7.8.1970 ந் திகதியன்று 28 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் பட்டப் பின்னரேனும் வேறு வகையிலேனும் குறைந்தபட்சம் ஒரு கழகவாண்டுக்கு கற்பித்தல் தொழிலில் முழுநேரப் பயிற்சியைச் சித்திகரமாகப் பின்பற்றிய பட்டதாரியாக இருக்க வேண்டும். அபேட்சகர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் பட்டப் பரீட்சையில் இரசாயனம், கணிதம் ஆகிய பாடங்களுடன் சித்தி எய்தி இருப்பதுடன் பட்டம் பெற்றபின் ஆகக் குறைந்தது 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்கவும் வேண்டும். தமிழில் சிறந்த அறிவு பெற்றிருப்பதுடன் விரிவுரைகளைத் தமிழில் நடத்தக்கூடியவராய் இருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப் பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு— (i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப் பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்ககாய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின் படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர்.எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம், கொழும்பு 1,
17.7.70

7–957/4—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

---

## கல்வி அமைச்சு

### சலனப்பட ஏடகப் பொறுப்பாளர் பதவி

கல்வி அமைச்சிலுள்ள சலனப்பட ஏடகப் பொறுப்பாளர் பதவிக்குப் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் படிவ முறைக்கு அமைய தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) 1970 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) அரசகரும மொழி நோக்கங்களின் பொருட்டு நியமதாரி புதிய முறைப்படி நியமிக்கப்படுபவராயின் தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாகும்.

(iii) அரசினர் சேவையில் நிரந்தர பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பதில் நியமனமாக அமையும்.

(iv) நியமதாரி தீவின் எப்பகுதியிலும் சேவை புரிய வேண்டும்.

(v) ஆட்சேர்ப்பு, நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும்.

3. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம். ரூ. 3,450—19 × 90—5,160 ஆகும் (ரூ. 3,810 பெறுமுன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.) 1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 1,329—19 × 72—2,688 ஆகும்.

4. **வேண்டப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும்.

(i) கல்வி அமைச்சில் அல்லது கல்வி அமைச்சின் கீழுள்ள யாதேனும் திணைக்களத்தில் சேவை புரிபவராக இருக்கவேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது)

(iii) (அ) இரசாயனம் உட்பட இரு விஞ்ஞான பாடங்களுடன் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது

(ஆ) இரு தடவைகளுக்கு மேற்படாத தோற்றி, இரசாயனம் உட்பட இரு விஞ்ஞான பாடங்களுடன் 6 பாடங்களில் க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும். அல்லது

(இ) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(iv) நீடிக்கும் நல்ல நினைவாற்றல் கொண்டிருத்தல் வேண்டும்; 35 மி. மீ. சலனப் படங்களை இணைக்கும் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும். பட எதிர்மறைகள், நேர்கள், பதிவு சுவடிகள், பிரதிவெட்டல் ஆகியவற்றைக் கையாளுந் திறனும் பேணுந்திறனும் கொண்டிருத்தல் வேண்டும். ஏடகப் பொருட்களைத் தேர்ந்து, வகுத்து, வரிசைப்படுத்தும் ஆற்றல் கொண்டிருத்தல் வேண்டும். சலனப்பட ஏடகம் ஒன்றைப் பேணி செவ்விதில் காக்கும் அனுபவம் கூடிய ஒரு தகுதியாக அமையும்.

குறிப்பு.—கல்வி அமைச்சிலும் கல்வி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களிலும் சேவை புரியும் சலனப்பட நுண் தொழிலாளர்களுள், கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் பெற்று 5 வருடத்துக்குக் குறையாத சேவை புரிந்துள்ளவர்களும் மேலுள்ள (iv) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளையும் அனுபவத்தையும் பெற்றுள்ளவர்களின் விண்ணப்பங்களும் சீர்தூக்கப்படும்.

(v) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள், வேண்டப்படும் நேரத்தில், பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(ஆ) உயர்தொழில் தகைமைகள் தொடர்பில் பெற்றுள்ள தராதரப் பத்திரங்கள்.

(இ) சலனப்பட ஏடக வேலையில் பெற்றுள்ள அனுபவத்தை நிரூபித்தற்கான தராதரப் பத்திரங்கள்.

குறிப்பு.— (i) சாதனங்களேனும் சாதனங்களின் பிரதிகளேனும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாகா.

(ii) கேட்கப்படும் நேரம் வேண்டிய சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. அரசினர் சேவையிலுள்ள தகுதியுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்கள/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். எனினும் விண்ணப்பத்தின் ஒரு பிரதி கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு நேரே அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின்பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும், அத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதிக்கு முன் உரிய திணைக்கள/நிலையத் தலைவரால் பெறப்பட்டு, தாமதத்துக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்குமாறு அவர் சிபார்சு செய்யுமிடத்து ஏற்றுக் கொள்ளப்படும்.

7. அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கு அமைபவையும் அரசினர் செய்தி மடலின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கும் விசேட கவனம் கோரப்படுகிறது.

8. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் அத்தகைய அறிவித்தலைப் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் அது பற்றிக் கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரிகள் தமது உரிமை கோரப்படுதற்கான உரித்தை இழப்பவராவர்.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆு ஜூலை மீ 17 ந் வ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**சலனப்பட ஏடகப் பொறுப்பாளர் பதவி**

1. முழுப்பெயர் :————.
(தெளிவாக் எழுதவும்)

2. நிரந்தர விலாசம் :————.

3. சொந்த இடம் :————.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ள படி சரியான வயது :வரு :———— மா :———— நா :————
பிறந்த திகதி :————.

5. பிறந்த இடம் :————.
(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பூட்டன் :————.

6. வம்சாவழியினுலா பதிவு காரணமாகவா இலங்கையர் :————.

7. கல்வித் தகைமைகள் :————.
(i) சி. பா. த/க. பொ. த. பத்திரப் பரீட்சையில் சித்தி எய்திய பாடங்களும் சித்தி எய்திய வருடமும் (திறமைச் சித்திகளும் விசேட சித்திகளும் குறிப்பிடப்பட வேண்டும்.)
(ii) சலனப்பட ஏடக வேலையில் பெற்றுள்ள அனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :————.
(iii) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை பற்றிய விபரங்கள் :————.

8. அறிவித்தலின் 5 (இ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சேவை விபரங்கள் (சேவை புரிந்த நிலையங்கள், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்.) :————.

9. விவாகஞ் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா :————.

10. சட்ட முறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி, (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ் வளவுக்கு ? :————.

12. உமக்கெதிராக யாதேனும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா ? அங்ஙனமாயின், விபரங் கொடுக்கவும் :————.

13. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின் (அ) படைக்கூற்றின் பெயர் (ஆ) வகித்த பதவி (இ) சேர்ந்த, விலகிய திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

14. பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தி யோகம் :————.
 (i) வகித்த பதவிகள் :————.
 (ii) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.
 (iii) விலகியதற்கான காரணம் :————.

15. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பத வியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம் (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள் (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

16. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் : ————.
 (i) நிலையம் :————.
 (ii) பதவியும் பதவியின் தரமும் :————.
 (iii) நியமனத் திகதி :————.
 (iv) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/ சமயோசிதமா :————.
 (v) தற்போதைய சம்பளமும் (சகாயப் படிகள் உட்படாத) சம்பள விகிதமும் :————.
 (iv) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

17. வேறு யாதேனும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் கொடுபட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இவற்றில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழை யானவை என நான் தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின் காணப்படின் சேவையிலிருந்து எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் நான் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————————,
திகதி :————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**திணைக்கள/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்**

எனது இல :
உங்கள் எண் : பொ. நி/30

நிரந்தரச் செயலாளர்,
கல்வி அமைச்சு.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்/ பின்* இவ்விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

.................. ஆம் பந்தியில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவையென/பின்வரும் திருத்தங்களுக்கமையச் சரியானவையென அத்தாட்சிப் படுத்துகிறேன்.

————————,
திகதி :————. திணைக்கள/நிலையத் தலைவரின் கையொப்பம்.

(*பொருத்தமற்றதை வெட்டிவிடுக)

7–958—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

## கல்வி அலுவல் அமைச்சு

### இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் புற விரிவுரையாளர் பதவிகள்

கொழும்பு, இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியிலுள்ள புற விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் பயிற்சி நெறிகளுக்கும் பாடங்களுக்குமே புற விரிவுரையாளர் தேவைப்படுகின்றனர் :—

**கணக்கியல் பிரிவு**

| பயிற்சி நெறி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|
| கணக்கியல் தகுதித் தேர்வு | பின்னேரம் | (1) பொது வணிக அறிவு<br>(2) வணிகச் சட்டம்<br>(3) கணக்குமுறை<br>(4) கணக்குப் பரிசோதனை<br>(5) செலவினக் கணக்கு முறைகள்<br>(6) உயர்தரக் கணக்குமுறை<br>(7) தத்துவகாரர் முதலியோர் பற்றிய சட்டம்<br>(8) ஆளுகைக் கணக்குமுறை<br>(9) வரி விதிப்பு<br>(10) பொது நிதி அறிவு |
| செயலாளர் கடமை | பின்னேரம் | (1) சட்டத்தின் பொதுப் பிரமாணங்கள்<br>(2) பொருளியல் |
| வங்கித் தொழில் | பின்னேரம் | (1) பொருளியற் புவியியல்<br>(2) சட்டப் பிரமாணங்கள்<br>(3) கணக்குமுறை<br>(4) நாணயக் கொள்கை<br>(5) வங்கித் தொழில் பற்றிய சட்டம்<br>(6) அந்நியச் செலாவணி வியாபாரத்தோடிணைந்த நிதியியல்<br>(7) வங்கித் தொழில் பயிற்சி |
| இடப்பெயர்ச்சி | பின்னேரம் | (1) இடப்பெயர்ச்சியின் மூலகங்கள்<br>(2) இக்கால இடப்பெயர்ச்சியின் பரிநாமம்<br>(3) பொருளியல்<br>(4) சட்டப் பிரமாணங்கள்<br>(5) புவியியல் |
| செலவினக் கணக்கியல் | பின்னேரம் | (1) தொழில்முறை நிர்வாகம்<br>(2) கணக்குப் பதிவியல்<br>(3) புள்ளிவிபர இயல்<br>(4) பொருளியல்<br>(5) செலவினக் கணக்குமுறை (தொழில்)<br>(6) செலவினக் கணக்குமுறை (பதார்த்தங்கள்)<br>(7) செலவினக் கணக்குமுறை (பொதுத் தலைப்பு) |

## வணிகப் பிரிவு (ஆங்கிலம்)

| பயிற்சி நெறி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|
| வணிகத் தகுதித் தேர்வு | பகல் | (1) முயற்சி நிர்வாகம்<br>(2) பொருளியல் பிரமாணங்கள்<br>(3) பிரயோகப் பொருளியல்<br>(4) அரசியல் கொள்கை<br>(5) பொது நிதியியல்<br>(6) கணக்குமுறை<br>(7) கணக்குப் பரிசோதனை<br>(8) வரி விதிப்பு |
| மதிப்பீட்டுத் தகுதித் தேர்வு | பகல்/பின்னேரம் | (1) மதிப்பீடு<br>(2) நிலம் பற்றிய சட்டம்<br>(3) உள்ளூராட்சி நிதியியல்<br>(4) விவசாயம்<br>(5) நகரமைப்புத் திட்டம்<br>(6) கட்டட அமைப்பு<br>(7) அளத்தல் |
| கணக்குப் பதிவியலாளருக்கான வணிக தராதரப் பத்திரம் | பகல் | (1) வணிகப் புவியியல்<br>(2) வணிக எண்கணிதம் |
| கணக்குப் பதிவியலாளருக்கான வணிக தராதரப் பத்திரம் | பின்னேரம் | (1) கணக்குப் பதிவியல்<br>(2) வணிக மூலகங்கள்<br>(3) வணிகப் புவியியல்<br>(4) வணிகமும் நிதியும் |
| உயர் சுருக்கெழுத்தியல் | பின்னேரம் | (1) சுருக்கெழுத்து |
| விற்பனையாண்மையும் விற்பனை ஆளுகையும் | போயா முன்தினம் | (1) விற்பனையாண்மையும் விற்பனை ஆளுகையும் |

## வணிகப் பிரிவு (சிங்களம்)

| பயிற்சி நெறி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|
| வணிகத் தகுதித் தேர்வு | பகல் | (1) பொருளியல் மூலகங்கள்<br>(2) செலவினம் கணக்குமுறை<br>(3) வரி விதிப்பு<br>(4) முயற்சி நிர்வாகம் |
| கணக்குப் பதிவியலாளருக்கும் சுருக்கெழுத்துத் தட்டெழுத் தாளருக்குமான வணிகத் தராதரப் பத்திரம் | பகல் | (1) சுருக்கெழுத்து<br>(2) சிங்கள மொழி<br>(3) வணிக எண்கணிதம் |
| கணக்குப் பதிவியலாளருக்கும் சுருக்கெழுத்துத் தட்டெழுத் தாளருக்குமான வணிகத் தராதரப் பத்திரம் | பின்னேரம் | (1) கணக்குப் பதிவியல்<br>(2) கணக்குமுறை<br>(3) வணிகப் புவியியல்<br>(4) வணிக எண்கணிதம்<br>(5) சுருக்கெழுத்து<br>(6) வணிகமும் நிதியும் |
| சுருக்கெழுத்தாளர் | பகல்/பின்னேரம் | (1) சிங்கள மொழி |
| உயர் சுருக்கெழுத்தியல் | பின்னேரம் | (1) சுருக்கெழுத்து<br>(2) சிங்கள மொழி<br>(3) தட்டெழுத்து |
| விற்பனையாண்மையும் விற்பனை ஆளுகையும் | போயா முன்தினம் | (1) விற்பனையாண்மையும் விற்பனை ஆளுகையும் |

## பயில் தொழிற் பிரிவு

| பயிற்சி நெறி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|
| பொறிச்சாலைப் பயிற்சியில் மூன்று வருடப் பயிற்சி நெறி | பின்னேரம் | (1) பொறிச்சாலைப் பயிற்சி (செய்முறை)<br>(2) வினைச்சாலைத் தொழில் நுட்பமும் கணிப்பும்<br>(3) தொழில்நுட்ப வரைவு |
| பொருத்தலில் மூன்று வருடப் பயிற்சி நெறி | பின்னேரம் | (1) பொருத்தல் செய்கை முறைகள்<br>(2) கொள்கையும் கணிப்பும்<br>(3) தொழில்நுட்ப வரைவு |
| தச்சு வரைதல் | பின்னேரம் | (1) தச்சு வரைதல் |
| எழுத்துக் கோர்த்தலில் மூன்று வருட பயிற்சி நெறி | பின்னேரம் | (1) கொள்கையும் கணிப்பும்<br>(2) செய்முறைகள்<br>(3) ஆங்கில மொழி |
| புத்தகங்கள் கட்டலில் மூன்று வருட பயிற்சி நெறி | பின்னேரம் | (1) கொள்கையும் கணிப்பும்<br>(2) செய்முறைகள்<br>(3) ஆங்கில மொழி |
| எழுத்து அழுத்தப் பொறி அச்சிடலில் மூன்று வருட பயிற்சி நெறி | பின்னேரம் | (1) கொள்கையும் கணிப்பும்<br>(2) செய்முறைகள்<br>(3) ஆங்கில மொழி |
| வானொலி பேணற் சேவையிலும் இலத்திரனியற் சேவையிலும் ஈராண்டுப் பயிற்சி | பகல் | (1) வானொலிக் கொள்கை<br>(2) இலத்திரனியற் கொள்கை |
| வானொலி பேணற் சேவையில் ஒரு வருட பயிற்சிநெறி | பின்னேரம் | (1) செய்முறைகள்<br>(2) கொள்கை |
| குழாயமைப்புத் தொழில் ஒரு வருட பயிற்சி நெறி | பின்னேரம் | (1) குழாயமைப்பு |

**நேரம்.**—பகல் நேரப் பயிற்சி நெறிகள் வார நாட்களில் மு.ப. 8.00 மணி தொடக்கம் பி. ப. 5.00 மணி வரையும், பின்னேர பயிற்சி நெறிகள் வார நாட்களில் பி. ப. 5.00 தொடக்கம் பி. ப. 7.15 மணி வரையும், போயா முன்தினங்களில் பி. ப. 1.30 மணி தொடக்கம் பி. ப. 4.30 மணி வரையும் நடைபெறும்.

**கட்டணம்.**—விரிவுரையாளருக்கான கட்டண விகிதங்கள் ஒரு மணித்தியால விரிவுரைக்கு ரூபா 2.50 தொடக்கம் ரூபா 21.00 வரை மாறுபடும்; தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்கு கொடுபடக்கூடிய வீதங்கள் அவர்களின் கல்வித் தகைமைகளுக்கும் உயர் தொழிற்றகைமைகளுக்கும் திறைசேரியால் விதிக்கப்பட்டுள்ள பிரகாரம் பயிற்சி நெறியின் மட்டத்துக்கும் அமையும். படிப்பித்தல் அனுபவம் பெற்றுள்ள விண்ணப்பதாரி களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**நியமன நியதிகள்.**—நியமனம் 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் 1971 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் முடிவடையும் ஒரு கல்லூரி ஆண்டுக்கானதாகும். எனினும், காரணங்கள் ஒன்றும் காட்டாது கல்லூரி ஆண்டின்போது எந்நேரத்திலேனும் அவர்களின் சேவை நிறுத்தப்படலாம்.

கல்வி ஆண்டில் படிப்பிக்க வேண்டியதான அவர்களுக்குக் கொடுபடும் பாடத்திட்டங்களை அவர்கள் எங்ஙனம் படிப்பிப்பார்களென விளக்கும் வேலைத்திட்டங்களை பருவம் ஆரம்பிக்குமுன் புற விரிவுரையாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும். கல்லூரியாண்டின்போது அவர்கள் நிகழ்த்தும் விரிவுரைகள் அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு அமைய வேண்டும்.

பருவப் பரீட்சைகளில் வெளியே இருந்து பரீட்சகர்கள் அமர்த்தப்பட்டால் அன்றி, தங்களுடைய வகுப்புகளிலுள்ள மாணவர்களை பருவ இடைக்கால, பருவப் பரீட்சைகளில் அவர்கள் மேலதிக வேதனமின்றி பரீட்சிக்க வேண்டும்.

**விண்ணப்பங்கள் ஏற்கும் திகதி.**—விண்ணப்பங்கள், கீழ்க்காணும் படிவ முறையில் இரட்டைப் பிரதியில் தயாரிக்கப்பட்டு " அதிபர், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, கொழும்பு 10 " என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 8 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

கொழும்பு வட்டார கல்வி அலுவலகம்,
கொழும்பு 7,
1970 ம் ஆடு ஜூலை மீ 12 ந உ.

டீ. ஜீ. சுகததாச,
கல்வி ஆள்வோன்,
கொழும்புப் பகுதி.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர் : ————.
2. வயது : ————.
3. சொந்த விலாசம் (தொலைபேசி இலக்கம் யாதேனும் இருப்பின் கொடுக்கவும்) : ————.
4. அலுவலக விலாசம் (தொலைபேசி இலக்கம் யாதேனும் இருப்பின் கொடுக்கவும்) : ————.
5. தொழில் அல்லது உத்தியோகம் : ————.
6. வேறு உத்தியோகம் யாதேனும் இருப்பின் : ————.
7. கல்வித் தகைமைகள் (பெற்ற திகதிகளைக் கொடுக்கவும்) : ————.
8. உயர்தொழில் தகைமைகள் (பெற்ற திகதிகளைக் கொடுக்கவும்) : ————.
9. படிப்பித்தல் அனுபவம், யாதேனும் இருப்பின் : ————.
10. செயல்முறை அனுபவம், யாதேனும் இருப்பின் : ————.
11. புற விரிவுரையாளராக கடமை புரிய விரும்பும் பயிற்சி நெறியும் பாடங்களும் :—
    பயிற்சி நெறி : ————. பாடங்கள் : ————.
12. வகுப்புக்களைச் சிங்களத்தில்/ஆங்கிலத்தில் நடாத்த முடியுமா ? : ————.
13. வாராந்தம் நிகழ்த்தக்கூடிய விரிவுரைகளின் ஆகக்கூடிய எண்ணிக்கை : ————.
14. நீர் ஓர் அரசாங்க ஊழியரா ? அங்ஙனமாயின் அலுவலக நேரங்களின் பின் விரிவுரைகள் நிகழ்த்த ஆயத்தமா ? : ————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ————.

7–858—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916.

---

### கல்வி அமைச்சு

## வட்டார வித்தியாதிகாரிகள் பதவிகள்

கல்வி அமைச்சில் ஏற்படும் வட்டார வித்தியாதிகாரிகள் பதவி களுக்கு ஆண்களிடமும் பெண்களிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய அச்சடிக்கப்பட்ட படிவங்களிலே தயாரிக்கப்படும் விண்ணப் பங்கள், 1970 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 5 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " நிரந்தரக் காரிய தரிசி, கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

**குறிப்பு.**—(1) இப்பதவிக்கு விண்ணப்பம் செய்ய விரும்பும் ஒவ் வொருவரும் தான் ஆசிரியராகப் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கம், பெற்றுள்ள பட்டம், பட்டப் பரீட்சைக்கான பாடங்கள், படிப்பித் தல் அனுபவம் ஆகிய விபரங்களைக் கொடுத்து, ஒரு படிவத்துக்கு, " கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளை) " எழுதுமூலம் விண்ணப் பிக்க வேண்டும். படிவங்களுக்கான விண்ணப்பங்கள் 1970 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆந் திகதிவரை மட்டுமே ஏற்றுக் கொள் ளப்படும். அத்தகைய விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பொ. நி. 25/15 என்ற இலக் கம் இடப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் சொந்த விலாசமிடப் பட்ட, முத்திரை ஒட்டப்படாத நீண்ட உறையும் அனுப்பப்பட வேண்டும். நேரில் வரும் எவருக்கும் படிவம் வழங்கப்படமாட் டாது.

குறிப்பு.—(ii) விண்ணப்பப் படிவமேனும் அது பற்றிய எக்கடித மேனும் அஞ்சல் செய்யப்பட்டபின் காணுமற்போனது அல்லது தாமதிக்கப்பட்டது என்ற எவ்வித குற்றச்சாட்டும் ஏற்றுக் கொள் ளப்படமாட்டாது. தமது விண்ணப்பங்களை கடைசிநாள்வரை தாம திக்கும் விண்ணப்பதாரிகள் தாமாகவே தமக்கு ஆபத்தைத் தேடுப வராவர்.

2. சம்பளம்.—இப்பதவிக்கான ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு பட்டதாரிகளுக்கு :—

ரூ. 6,024—4×144—8×180—6×240—ரூ. 9,480 வருடாந்தம். ரூ. 4,080, ரூ. 7,500, ரூ. 8,280 ஆகிய வருடாந்தச் சம்பளங்கள் பெறு முன் திறமைக் கடமைக் கடப்புப்படிகள் உண்டு.

பட்டதாரிகள் அல்லாதவர்களுக்கு :

ரூ. 5,016—11×120—5×180—7,500 வருடாந்தம். ரூ. 5,580, ரூ. 6,780 ஆகிய வருடாந்தச் சம்பளங்கள் பெறுமுன் திறமைக் கடப்புப்படிகள் உண்டு.

3. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பளப் பிரமாணக் குறிப்பின்கீழ் இளைப்பாற்று உரித்துடையனவையுமாகும். பெண்ணொருவர் நியமிக்கப்படுமிடத்து, அவர் சேமலாப நிதி நன்மைகளுக்கு உரித்துடையவராவர் ; இந்நோக்கத்துக்கென அவர் தனது சம்பளத்தில் 5 நூற்று வீதமும் அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படுபவர், அரசினரின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் இல்லாவிடின் 3 வருட காலத்துக்கு, காரியத்துக்கேற்ப, தகுதிகாண் அல்லது பரீட்சார்த்த முறையில் நியமிக்கப்படுவர்.

(ii) பெண் உத்தியோகத்தர் ஒருவர் சேமலாப நிதிக்குத் தொடர்ந்து கட்டணம் செலுத்தவா, அல்லது இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என, 10 வருட மொத்த சேவையைப் பூர்த்தி செய்யுமுன் எந்நேரத்திலேனும் அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நிதி நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே 10 வருட சேவை அவர் பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் ஆறு மாத காலத்துக்குள் தனது விருப்பத்தை அவர் தெரிவிக்க வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படுபவர், நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் அரசினர் விதிகளிலும் பிரமாணங்களிலும் ஒரு பரீட்சையில் சித்தியடைய வேண்டும் ; அரசினர் சேவை ஆணைக்குழு விதிகளிலும் நிர்வாகப் பிரமாணங்களிலும் ஒரு வினாப் பத்திரமும் நிதி விதிகளில் இன்னொரு வினாப்பத்திரமும் கல்விச் சட்டத்தில் இன்னொரு வினாப்பத்திரமாக மேற்குறித்த பரீட்சை 3 வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும், அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து அவருடைய சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக (இப் பரீட்சையில் சித்தி எய்துதற்கு) எடுக்கப்படும் காலம் சம்பளம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(iv) தெரிவு செய்யப்படுவோர், இரண்டாவது திறமைக் கடப்புப் படிக்கு மேலே பதவி உயர்ச்சி அளிக்கப்படமுன் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் IIந் தர உத்தியோகத்தர் ஆகியோருக்கான தேசிய மொழிகளிலான பரீட்சையில் (தமிழ் உத்தியோகத்தர்கள்) சிங்களத்திலும் (சிங்கள உத்தியோகத்தர்கள்) தமிழிலும் தகைமை பெற வேண்டும். இரண்டாவது திறமைக்கடப்புப்படி மட்டத்தைத் தாண்டியவர்கள் மூன்றாவது திறமைக் கடப்புப் படிக்குமேல் செல்லுமுன் குறித்த தகைமையைப் பெறவேண்டும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து அவருடைய சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமான (இப்பரீட்சையில் சித்தி எய்துதற்கு) எடுக்கப்படும் காலம் சம்பளம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(v) உத்தியோகத்தர் ஒருவரை மேலும் சேவையில் வைத்திருத்தற்கு அவர் தகுதியற்றவரெனக் கருதப்படின் தகுதிகாண்/பரீட்சார்த்த காலத்தில் அல்லது அக்கால முடிவில் சேவையிலிருந்து விலக்கப்படலாம்.

(vi) தெரிவு செய்யப்படுபவர் தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

4. தேவைப்படும் கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் :—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமாக நிரூபிக்க வேண்டும் :—

(அ) 1970 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 5 ஆந் திகதியன்று 23 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கும் வித்தியாபதி முகாமைப் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கும் இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது.

(ஆ) பட்டதாரிகளைப் பொறுத்தவரை—

குறைந்தபட்சம் 3 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பயிற்றப்பட்ட பட்டதாரியாகவேனும் 5 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்றவரும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலைப் பட்டதாரியாகவும் இருக்க வேண்டும்.
பட்டதாரிகள் அல்லாதவர்களைப் பொறுத்தவரையில்—
பயிற்றப்பட்ட ஆசிரியராக 10 வருட சேவை புரிந்த 1 ஆந் தர பயிற்றப்பட்ட ஆசிரியராக அல்லது ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராக 15 வருட சேவைபுரிந்த 1 ஆந் தர ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராக இருக்க வேண்டும்.

(இ) சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (சாதாரணதர) பரீட்சையில் அல்லது வேறு யாதேனும் உயர்ந்த பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் அல்லது சிங்கள/தமிழ் இலக்கியத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஈ) சிறந்த நற்குணம் உடையவராயும் தேகாரோக்கியம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும்.—(i) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்கள் நோக்கத்துக்காகக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ii) பெற்றுள்ள கல்வித் தராதரப் பத்திரங்களும் தொழில் தராதரப் பத்திரங்களும்.

(iii) சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை.)

(iv) சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய பரீட்சைத் தராதரப் பத்திரம் அல்லது வேறு யாதேனும் (இதனை நிரூபிக்கும்) சான்று

(அரசினர் சேவையில் உள்ளவர்கள் நற்சாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பதிலிருந்து மட்டுமே தவிர்த்து அளிக்கப்படுகின்றனர்.

6. இவ்விடயம் சம்பந்தமான விண்ணப்பங்களேனும் வேறு யாதேனும் கடிதங்களேனும் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அனுப்பப்பட வேண்டுமே யொழிய அமைச்சில் கடமை புரியும் எவ்வுத்தியோகத்தரின் பெயருக்குமல்ல.

7. அரசினர் செய்திமடலின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைவையுமான பொது நிபந்தனைகளுக்கும் உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

8. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்பவேண்டும். அரசினர், வித்தியாதிபதி முகாமைப் பாடசாலை ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு உரிய பிரதேச வித்தியாதிபதி/பிரதம வித்தியாதிகாரி மூலம் அனுப்ப வேண்டும். பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட்டு விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டதென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளும்படி அத்தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அங்ஙனம் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அதுபற்றி நிரந்தரக் காரியதரிசிக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுவதற்கான உரித்தை இழப்பார்.

10. பதில் வட்டார வித்தியாதிகாரிகளும், வட்டார வித்தியாதிகாரிகளின் கடமைகளைப் புரியும் உத்தியோகத்தர்களும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

நிரந்தரக் காரியதரிசியும்,
மகா வித்தியாதிபதியும்.

தொடரெண் : பொ. நி. 25/15
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
15.7.1970.

7-878—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

GA/5/163/158

## கல்வி அமைச்சு

### பதவி : தட்டெழுத்துப் பொறி பழுதுபார்ப்போர் I ம், II வகுப்பு

கல்வி அமைச்சிலுள்ள வேலையாளர்களிடமிருந்து தட்டெழுத்துப் பொறி பழுதுபார்ப்போர், I ம், II ம் வகுப்புப் பதவிகளுக்குக் கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பெற்றுள்ள அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " மகாவித்தியாதிபதி (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 8 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவிப் பெயர் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

குறிப்பு.—(1) 5.3.70 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பிரசுரத் திறகிணங்க ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

(2) இரு பதவிகளுக்கும் விண்ணப்பிக்க விரும்பியோர் தனித் தனி விண்ணப்பங்களில் புறம்பாக விண்ணப்பிக்க வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவி நிரந்தரமானது ; நியமதாரி இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து 7.2.64 ஆந் திகதிய 633 ஆம் இலக்கத் திறைசேரி சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமையும். நியமதாரி, மாதாந்தச் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்பட்டதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப்படும்வரை அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப்பட்டதும் விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும்.

(ii) நியமதாரி, அரசகரும மொழிச் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு, புதிய முறைப்படி நியமிக்கப்படுவராயின் பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாகும்.

(iii) அரசினரின் கீழ் ஒரு நிரந்தர பதவியை வகிப்பவர் நியமிக்கப் படுதற்குத் தெரிவு செய்யப்படின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவர் பதில் கடமை புரியும் அல்லது பரீட்சார்த்த முறையில் நியமிக்கப்படுவார்.

(iv) நியமதாரி தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

(v) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை, ஒரு செயல்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடாத்தப்படும்.

**3. சம்பள அளவுத் திட்டம்**

**(1) தட்டெழுத்துப்பொறி பழுதுபார்ப்போர் I ம் வகுப்புப் பதவி**

(அ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள்ளும் கொழும்பு மாநகர சபை எல்லையிலிருந்து 5 மைல் சுற்றுடலுக்குள்ளும் அல்லது எந்திரவியல் நிலையமாகத் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் சேவை புரிபவர்களுக்கு—

1.10.69 தொடக்கம் காரியப்படும் ஒன்று திரட்டிய சம்பள அளவுத் திட்டம்—முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூ. 10.70 உம் அதன் பின்னர் ரூபா 3,240—12 × 60—3,960 வருடாந்தம்.

1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம்.—முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூபா 3.86 உம் அதன் பின்னர் ரூபா 1,170—42 × 12—1,674 வருடாந்தம்

(ஆ) எந்திரவியல் நிலையங்களாக திறைசேரியால் அங்கீகரிக்கப் படாதவையும் வெளியூர்களில் உள்ளவையுமான நிலையங்களில் சேவை புரிபவர்களுக்கு—

1.10.69 தொடக்கம் காரியப்படும் ஒன்று திரட்டிய சம்பள அளவுத் திட்டம்.—முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் 9.70 உம் அதன் பின்னர் ரூபா 3,060—9 × 60—3,600 வருடாந்தம்.

1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம்.—முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூபா 3.30 உம் அதன் பின்னர் ரூபா 1,044—42 × 8—1,380 வருடாந்தம்.

**(2) தட்டெழுத்துப்பொறி பழுதுபார்ப்போர் II ஆம் வகுப்புப் பதவி**

(அ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள்ளும் கொழும்பு மாநகர சபை எல்லையிலிருந்தும் 5 மைல் சுற்றுடலுக்குள்ளும் அல்லது எந்திரவியல் நிலையமாகத் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் சேவை புரிபவர்களுக்கு—

1.10.69 தொடக்கம் காரியப்படும் ஒன்று திரட்டிய சம்பள அளவுத் திட்டம்—முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூபா 8.00 உம் அதன் பின்னர் ரூபா 2,640—15 × 60—3,540 வருடாந்தம்.

1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம்—முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூபா 2.30 உம் அதன் பின்னர் ரூபா 750—42 × 13—1,296 வருடாந்தம்.

(ஆ) எந்திரவியல் நிலையங்களாக திறைசேரியால் அங்கீகரிக்கப்படாதவையும் வெளியூர்களில் உள்ளவையுமான நிலையங்களில் சேவை புரிபவர்களுக்கு—

1.10.69 தொடக்கம் காரியப்படும் ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத்திட்டம்—முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூபா 7.60 உம் அதன் பின்னர் ரூபா 2,640—10 × 60—3,240 வருடாந்தம்.

1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத்திட்டம்—முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூபா 2.10 உம் அதன் பின்னர் ரூபா 750—42 × 8—1,086 வருடாந்தம்.

**4. தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

**(அ) தட்டெழுத்துப் பொறி பழுதுபார்ப்போர் I ம் வகுப்புப் பதவி**

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்கவேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(ii) (அ) எழுத, வாசிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஆ) சகல வகைத் தட்டெழுத்துப் பொறிகள் பற்றிய பூரண அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(இ) வேண்டியவிடத்து சிறு உதிரிக்கூறுகளை அமைத்து அவற்றைப் பொருத்தக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் தொழில் பயில்வோராக 10 வருட சேவை புரிந்திருக்க வேண்டும் ; இதில் குறைந்த பட்சம் 6 வருடங்கள் முதலாம் வகுப்புத் தொழில் பயில்வோராக இருக்க வேண்டும்.

(இதனை அத்தாட்சிப்படுத்துதற்கு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

**(ஆ) தட்டெழுத்துப் பொறி பழுதுபார்ப்போர்—II ஆம் வகுப்புப் பதவி**

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(ii) (அ) எழுத, வாசிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஆ) அளவுத் திட்டம் ஒன்றினை 1/32" அளவுக்கு வாசிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(இ) புரிவெட்டியும் புரியச்சும் கூடும் பயன்படுத்தும் அறிவும் பற்றுசு பிடிக்கும் அறிவும் ஓரளவுக்கு உடையராய் இருத்தல் வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் தொழில் பயில்வோராக 5 வருடத்துக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(இதனை அத்தாட்சிப்படுத்துதற்கு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

(இ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

குறிப்பு.—ஐக்கிய இராச்சிய யுத்த களங்களில் தொழில் பயில்வோராக புரிந்த சேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் புரிந்த சேவையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங்களில் எதனையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும். .—

(அ) ஆகக்கூடிய கல்வித் தகைமைப் பத்திரம் ;

(ஆ) தொழில் தகைமைப் பத்திரங்களும் தொழில்நுட்பத் தகைமைப் பத்திரங்களும் அல்லது இவற்றில் எவையேனும் ;

(இ) மேற்போந்த 4 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப் பட்டுள்ள நிறுவனத்தில் புரிந்த சேவையை அத்தாட்சிப்படுத்தும் அத்தாட்சிப்பத்திரங்கள் ;

(ஈ) சிங்களத்தில்/தமிழில் அல்லது சிங்களத்திலும் தமிழிலும் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

குறிப்பு.—(i) சாதனங்களையேனும் அல்லது அவற்றின் பிரதிகளையேனும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்தனுப்பத் தேவையில்லை.

(ii) கேட்கப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் பகுதி/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். எனினும், விண்ணப்பத்தின் ஒரு பிரதியை நிரந்தரக் காரியதரிசிக்கு நேரே அனுப்பலாம். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதி/நிலையத்தலைவரால் பெற்றுக்கொள்ளப் பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி அப்பகுதி/நிலையத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. அரசாங்க சேவையினுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், (II) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

8. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும் அத்தகைய அறிவித்தலை இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குப் பெறத்தவறும் அபேட்சகர்கள், கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தமது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பர்.

நிரந்தரச் செயலாளர்.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு–2,
16.7.1970.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாளில் விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும்)**

**தட்டெழுத்துப் பொறி பழுதுபார்ப்போர் I ம் வகுப்பு, II ம் வகுப்புப் பதவிகள்**

1. முழுப்பெயர் (தெளிவாக) : ————.

2. நிரந்தர விலாசம் : ————.

3. சொந்த இடம் : ————.

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி வயது : ————.
பிறந்த திகதி : ————.

5. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.

6. இலங்கைப் பிரஜையா ? அங்ஙனமாயின் வம்சாவழியினலா பதிவு காரணமாகவா ? : ————.

7. கல்வித் தகைமைகள் : ————.
(i) பொது : ————.
(ii) தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகைமைகளும் : ————.
(iii) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை : ————.

8. அறிவித்தலின் 4 ம் பந்தியில் கேட்கப்படும் சேவை விபரங்கள் : ————.
(நிலையம், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்)

9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————.

10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் : ————.

11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின், எவ்வளவுக்கு : ————.

12. யுத்த சேவையில் இருந்து விலகியவராயின்—
(அ) படைக் கூற்றின் பெயர் : ————.
(ஆ) வகித்த பதவி : ————.
(இ) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.

13. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா ? : ————.
அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் : ————.

14. பாடசாலையில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தியோகம் : ————.
(i) வகித்த பதவி : ————.
(ii) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
(iii) விலகியதற்கான காரணம் : ————.

15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம் (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள் (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.

16. தற்போதைய உத்தியோகம் : ————.
நிலையம் : ————.
(i) பதவிப் பெயரும் தரமும் : ————.
(ii) நியமனத் திகதி : ————.
(iii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா, சமயோசிதமா : ————.
(iv) தற்போதைய சம்பளமும் (சகாயப்படிகள் நீங்கலாக) சம்பள விகிதமும் : ————.
(v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

17. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

**பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்**

எனது எண் :
உமது எண் : GA/5

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதியின் முன்*/ பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

........இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை*/ பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை. விண்ணப்பங்கள் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

————.
பகுதி/நிலையத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயர் : ————.

திகதி : ————.
* பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

7–930—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

### ஆசிரியர் கலாசாலைப் பிரவேசப் பரீட்சை (விசேட பயிற்சிகள்) 1970

1970, ஏப்பிரில் 17 ஆந் திகதிய, 14,902 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மேற்படி பரீட்சை சம்பந்தமான அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது. அதிற் காணப்படும் 9 (iv) ஆவது பந்தியை நீக்கிவிட்டுக் கீழ்க்காணும் பந்தியினைச் சேர்க்க :—

9 (iv) விஞ்ஞானம்—(சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)

விஞ்ஞானம் I—1½ மணித்தியாலங்கள்

விஞ்ஞானம் II—2½ மணித்தியாலங்கள்

200 புள்ளிகள்—விஞ்ஞானப் பயிற்சிக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு.

இப்பரீட்சை, 1970, ஆகஸ்ட் 10 ஆந் திகதி ஆரம்பமாகும்.

கே. ரீ. டபிள்யூ. சுமணசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு—2,
1970, ஜூலை 12 ஆந் திகதி.

7-769—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916.

---

## மொறட்டுவை, கட்டுபெத்தை, இலங்கைத் தொழில்நுட்பவியற் கல்லூரியில் 3 வருட தொழில் நுட்பவியலாளர் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்தல்

1970 ஆம் ஆண்டு யூன் 18 ஆம் திகதி இல. 14,911 இலங்கை அரசாங்க வர்த்தமானியில், மேற்கூறிய பயிற்சி நெறிக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரி வெளியான அறிவித்தலைக் கவனிக்கவும். அந்த அறிவித்தலில் இரண்டாவது பந்தி பிரிவு (அ) நீக்கப்பட்டு, பின்வரும் புதுப்பிரிவு அதற்குப்பதிலாக வெளிப்படுத்தப்படுகிறது :—

"2—தகவுத்திறன்—(அ) அபேட்சகர்கள் 1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதியன்று 16 வயதுக்குக் குறையாதவர்களாயிருத்தல் வேண்டும். எனினும், 20 வயதுக்குக் குறைந்தவர்களுக்குச் சலுகை காட்டப்படும்."

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் திகதிக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

எல். எச். சுமணதாச,
அதிபர்.

இலங்கைத் தொழில் நுட்பவியற் கல்லூரி,
கட்டுபெத்தை, மொறட்டுவை,
1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதி.

7-778—24.7.70 ஆந் திகதிய வர்த்தமானி இல. 14,916.

---

## அம்பாறை ஹாடி சிரேஷ்ட தொழில் நுட்ப நிலையத்தில் மூன்று வருட தொழில் நுட்பவியலாளர் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்தல்— 1970/71 ஆம் பருவகாலம்

1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதியன்று வெளிவந்த அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 1970 யூன் 20 ஆந் திகதியின் மேற்படி அறிவித்தலின் திருத்தம்.

**தகவுத்திறன் :—(அ) வயது :**—பரீட்சார்த்தி 1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ஆந் திகதியில் 16 வயதுக்குக் கீழ் குறையாமல் இருத்தல் வேண்டும்; 20 வயதுக்குக் கீழ்ப்பட்டோருக்கு விசேட சலுகை உண்டு.

விண்ணப்பங்கள் முடிவுதிகதி :—1970 ஆகஸ்ட் 7 ஆந் திகதி.

மேற்குறிப்பிட்ட முந்திய அறிவித்தலின் பிரகாரம் மற்றைய தகைமைகளில் எதுவித மாற்றமும் இல்லை.

ஏ. விஜயரத்தின,
அதிபர்.

ஹாடி சிரேட்ட தொழில் நுட்பநிலையம்,
அம்பாறை.
13 யூன், 1970.

7-956—24.7.70 ஆந் திகதிய வர்த்தமானி இல. 14,916

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை அரச கடற்படை

### அசுத்தத்தைச் சுத்தஞ் செய்தல்

1. 10. 70 தொடக்கம் 30. 9. 71 வரைக்கும் இலங்கை அரச கடற்படைக்குச் சொந்தமான கலங்கள் கொழும்புத் துறைமுகத்தில் தங்கி நிற்கும் நேரங்களில் அவற்றின் அசுத்தத்தைச் சுத்தஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்வி நிபந்தனைகட்கு உட்பட மற்றைய விபரங்கள் யாவும் கீழே ஒப்பமிட்டு இருப்பவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்வி நிபந்தனைகட்கு அமைய கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கத் தகுதி உள்ளவர்க்கே கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

4. கேள்விப் பத்திரங்கள் 13. 8. 70 பிற்பகல் 3 மணி வரைக்கும் கொடுக்கப்படும்.

5. 14. 8. 70 முற்பகல் 10.30 மணிக்குப் பிந்தாமல் கடற்படைத் தளபதிக்குக் கேள்விப் பத்திரங்கள் கிடைக்க வேண்டும்.

6. ஒவ்வொரு கேள்வி பத்திரத்திற்கும் வைப்புப் பணமாக ரூபா 75/- கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்கு முன் இலங்கை அரச கடற்படைத் தலைமை அலுவலகத்தில் கட்டப்படுதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப் பணமெல்லாம் திருப்பித் தரப்படும்.

டீ. வீ. ஹன்ரர்,
கொமொடோர்
கடற்படைத் தளபதி

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
த. பெ. இல. 593,
கொழும்பு-1.
1970, யூலை 8 ஆம் திகதி.

7-759—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916.

## நீர்ப்பாசனத் திணைக்களம்—பொல்கொல்லை

### மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டம்

### *தற்காலிக விடுதிகள் அமைத்தல்*

கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கும் அவைகளைச் சமர்ப்பிப்பதற்கும் சம்பந்தப்பட்ட திகதிகள் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன :—

(1) கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்கான திகதிகள் :— 1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ந் திகதி தொடக்கம் 1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ந் திகதி வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

(2) கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்பதற்கான முடிவுத் திகதிகள்— 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் ஏற்றுக்கொள்ளப்படும்.

| இடம் | விபரம் | தொகை |
|---|---|---|
| "சி" கண்டம் .. | தற்காலிக தனி "ஏ" வகை வீடு .. | 2 |
| | தற்காலிக இரணை "பி" வகை வீடு .. | 3 |
| | தற்காலிக இரணை "சி" வகை வீடு .. | 1 |
| வட்டப்புலுவ .. | தற்காலிக வீடு .. .. | 1 |
| பள்ளத்தலவின்ன | தற்காலிக இரணை "பி" வகை வீடு .. | 2 |
| | தற்காலிக இரணை "சி" வகை வீடு .. | 2 |
| | தற்காலிக 6 அறைகள் படுக்கைக் கூடம் .. | 1 |
| | தற்காலிக அலுவலகம் .. | 1 |
| | தற்காலிக களஞ்சியம் .. | 1 |
| "ஜி" கண்டம் .. | தற்காலிக இரணை "பி" வகை வீடு .. | 1 |

எஸ். சோமசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மகாவலித் திட்டம்.

நீர்ப்பாசன காரியாலயம்,
பொல்கொல்லை,
14.7.1970.

7–970—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல.14,916

---

## கமத்தொழில் திணைக்களம்

### அரசாங்கப் பண்ணைகளுக்கு சோடிக் கிடுகுகள் விநியோகித்தல், பாரங் கொடுத்தல் ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன

மேற்கூறப்பட்ட வேலைகளுக்கான சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 70.8.4 ஆம் திகதி மு. ப. 10 மணி வரையும் யாழ்ப்பாணம் கமத் தொழில் (பண்ணை முகாமையும் ஆக்கமும்) கந்தோரில் கமத் தொழில் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

முருங்கம் பண்ணை—4000 சோடிக் கிடுகுகள்.

திருநெல்வேலி பாடசாலைப் பண்ணை—500 சோடிக் கிடுகுகள்.

திருநெல்வேலி பெண்கள் கிருஷிகப் பாடசாலை—2350 சோடிக் கிடுகுகள்.

திருகோணமலைப் பண்ணை—2000 சோடிக் கிடுகுகள்.

பரந்தன் பண்ணை—3000 சோடிக் கிடுகுகள்.

கோரப்படும் சோடிக் கிடுகுகளின் அளவுகள் நீளம் : 7 அடிக்கு மேலும் பின்னல் அகலம் 12 அங்குலத்திற்கு மேலும் இருத்தல் வேண்டும். விநியோகித்தல், பாரங்கொடுத்தல் 31.8.70 ம் திகதியிலோ அதற்கு முன்னரோ முடிவடைதல் வேண்டும். தேவைப்படும் திகதி அந்த பண்ணை முகாமையாளரால் அறிவிக்கப்படும். அறவிடும் தொகை 100 சோடிக் கிடுகுகளுக்குக் கணக்கிட வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவைகளுக் கும் வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ் வொரு கேள்வி பத்திரங்களுக்கும் ரூபா 10.00 வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத் திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பா விட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு ("சேவையின் பெயரும் நிலை யமும் கொடுக்கப்பட வேண்டும்.) ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்தி ரம்" என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடி வுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக் காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில், கமத் தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ) தொடர்பு கொள்ளவேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்பப்பணமாகக் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன் தினம் நண்பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங் களிலும் அல்லது கமத்தொழில் இலாகா போதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப் பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரர் களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர் களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதி களில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப் பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்படவேண்டும். கேள்விப் பத்திரங்களில அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப் பத்திரக் காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகியவற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச் சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள் விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்துமுடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய் யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பத்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்கு கள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுமையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமை யுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செயயப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட/பயிற்றப் படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த் துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விபபத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரி யின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங் கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெருது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

"இலங்கையர்" என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பள சட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலை பார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண் டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகா வில் வேலை பார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடி யாக, அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவ ராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அர சாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டா கவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செயதுகொள்ளமாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்கு முரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எம். எல். சி. இலங்ககூன்,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க. க. வும்ப.)

பேராதனை,
15.7.70.

7–966—24.7.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,916

---

## கமத்தொழில் திணைக்களம்

**அரசாங்கப் பண்ணைகளில் நெல் அறுவடை செய்தல், கொண்டு செல்லுதல், சூடு வைத்தல், வைக்கோல் கத்தை கட்டுதல், குவித்தல் ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன**

மேற்கூறப்பட்ட வேலைகள் சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்தி ரங்கள் 70.8.7 ஆம் திகதி மு. ப. 10 மணி வரையும் யாழ்ப்பாணம் கமத் தொழில் (பண்ணை முகாமையும் ஆக்கமும்) கந்தோரில் கமத்தொழில் அலுவலரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) கீழ்க்காணப்படும் பண்ணைகளில் நெல் அறுவடை செய்தல், கொண்டு செல்லுதல், சூடுவைத்தல், நெல் அறுவடை செய்து முடிவடை யச் செயயும் காலம் ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன :

| | நெல் அறு வடை ஆரம்ப தினம் | இனம் | அறுவடை செய்யும் ஏக்கர் | நெல் அறு வடை முடி வுத் தினம் |
|---|---|---|---|---|
| பரந்தன் பண்ணை .. | 10.8.1970. . | பச்சைப் பெருமாள் | 4 .. | 11.8.1970 |
| | 12.8.1970. . | ஷை .. | 4 .. | 14.8.1970 |
| | 15.8.1970. . | ஷை .. | 2 .. | 16.8.1970 |
| | 17.8.1970. . | ஷை .. | 9 .. | 19.8.1970 |
| | 20.8.1970. . | ஷை .. | 8 .. | 23.8.1970 |
| | 13.9.1970. . | ஷை .. | 9 .. | 15.9.1970 |
| கிளிநொச்சிப் பண்ணை | 14.8.1970. . | ஷை .. | 20 .. | 25.8.1970 |
| | 15.8.1970. . | 62–355 | 20 .. | 30.8.1970 |

பண்ணை அதிபரினாலோ அல்லது அவரது பிரதிநிதியாலோ குறிப்பிடும் இடத்திலேயே சூடு வைத்தல் வேண்டும். எந்த ஒரு நிலையிலும் நெல் மணிகளுக்கு ஊறு நிகழ்வதற்கும் நட்டம் ஏற்படுவதற்கும் இடங் கொடுத்தல் கூடாது. நெல் அறுவடை செய்ததன் பின்பு வயலில் மீதி யாக இருக்கும் அடிக்கட்டை 6 அங்குலத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட காலத்துக்குள் நெல் அறுவடை செய்து முடிப்பதுடன், குறிப்பிட்ட தினத்தின் பின் தாமதமாகும் ஒவ்வொரு நாளும் தண்டனை யாக நெற்பயிருக்கு ஏற்படும் நட்டத்திற்குச் சமமான அபராதம் கொந்த ராத்துக் காரரினால் செலுத்தப்பட வேண்டும். (பயிரின் நட்டம் கணக்கிடு வது, நெல் அறுவடை செயயும் கடைசித் திகதிக்குப் பின்பு மேலதிகமாக எடுக்கும் நாளுக்கு 30 ரூபா வீதமாகும்) எல்லா நடவடிக்கைகளும் பண்ணை முகாமையாளர் திருப்தியடையும்வண்ணம் இருத்தல் வேண்டும். குறைந்த பட்சம் நாள் ஒன்றுக்கு 4 ஏக்கரில் நெல் அறுவடை செய்தல் வேண்டும். மழையினால் பாதிப்பு ஏற்படாதுவிடின் அறுவடை செய்த தினத்தில் இருந்து இரண்டு நாட்களுக்குள் சூடு வைத்தல் வேண்டும். மழையினால் பாதிப்பு ஏற்படுமெனக் கண்டால் பண்ணை அதிபர் எவ் விடத்தில் சூடு வைத்தல் வேண்டும் என்பதைத்தீர்மானிப்பார். கொந்த ராத்துக்காரரின் கவலையினாலோ அல்லது அசட்டையினாலோ நெல்மணி களுக்கு ஊறு விளையுமாயின் அச்சேதத்தின் பெறுமதி கொந்தராத்துக் காரரிடமிருந்து அறவிடப்படும்.

இது சம்பந்தமாக அறவிடும் தொகை ஒவ்வொரு இனத்திற்கும் வெவ்வேருக ஒரு ஏக்கருக்கு என்ற அடிப்படையிலேயே குறிப்பிடுதல் வேண்டும். தெரிந்தெடுக்கப்படும் கேள்விக்காரர் முழு ஏக்கரையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்கத் தயாராய் இருத்தல் வேண்டும். பண்ணை அதிபரினதோ அல்லது அவரது பிரதிநிதியினதோ அறிவுறுத் துரைக்கு அனுகூலமாக அவரினால் ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் அல்லது பங்குக்குமாக நியமிக்கப்பட்ட தினத்தினுள் வேலையைச் செய்து முடித்தல் வேண்டும்.

(ஆ) அரசாங்கப் பண்ணைகளில் வைக்கோல் கத்தை கட்டுதல், குவிதல்.

| | | |
|---|---|---|
| பரந்தன் பண்ணை .. | .. | 10,000 கத்தைகள் |
| கிளிநொச்சிப் பண்ணை | .. | 10,000 கத்தைகள் |

ஒவ்வொரு கத்தையும் 5 இறுத்தலுக்குக் குறையாத நிறையுடைய தாய் இருத்தல் வேண்டும். 2,000 கத்தைகள் வீதம் குவித்து மழை நீர் உட்புகாவண்ணம் வைக்கோலால் அடுக்குதல் வேண்டும். வைக் கோல் கட்டும் இடத்தில் இருந்து 500 யார் தூரத்தில் பண்ணை அதிபர் குறிப்பிடும் இடத்தில குவத்தல வேண்டும். ஒவவொரு 100 கத்தை களுக்கும் செலவு மதிபபிட வேண்டும். தெரிவு செய்யப்பட்ட கேள்விக் காரர் பண்ணை அதிபர் அல்லது அவரது பிரதிநிதியின் திருப்திக்கமைய குறிப்பிட்ட காலத்துள் வேலையை முடித்தல் வேண்டும். வேலை தொடங்கும் திகதி பண்ணை அதிபரால் அறிவிக்கபபடும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவை களுக்கு வெவ்வேருன கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்வி பத்திரங்களுக்கும் ரூபா 10 வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படாவிட்டால் யாழ்ப்பாணம் கமத் தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல்வைத்த உறைகளை இதற்கென வைக்கப் பட்டிருக்கும்பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க்குறிப்பு ". . . . . . . ., (சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்). ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப்பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட் களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் நண்பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களி லும் அல்லது கமத்தொழில் இலாகா, பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச் சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பது டன் தாமத வேலை செய்யும் கொந்தராத்துக் காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப் பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தி யாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம், யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ) கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகிய வற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச் சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக் காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப் பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக் காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய் யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமை யுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட/பயிற்றப் படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக் கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரி யின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங் கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

"இலங்கையர்" என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பள சட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலை பார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலை பார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடி யாக, அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவ ராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அர சாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட் டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ள மாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்கும் முரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எம். எல். சீ. இலங்கோன்,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க.ப.).

பேராதனை,
15..7.70

7-969—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### மாங்குளம் நகர்காவலர் நிலையக் கட்டடத்திற்கு மின்பொறி நிறுவுதற்கும் வழங்குதற்குமான கேள்விப்பத்திரங்கள்

மேற்குறிப்பிட்ட சேவைக்குரிய கேள்விப்பத்திரங்களை 9.10.70 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக் கொள்வார்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியில் செலுத்தி, 6.10.70 நண் பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிட மிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத் திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "மாங்குளம் நகர்காவலர் நிலையக் கட்டடத்திற்கு மின்பொறி நிறுவுவதற்கும் வழங்கு வதற்குமான கேள்விப் பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதி பர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப் பப்படவேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவ ரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடி வடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்றமுடியாத வையுமாகும். கேள்விபத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவை களைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

6. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங் களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்டவேண் டும்.

7. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது, தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

8. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தி திணைக்களத்தில் 9.10.70 ந் திகதி முற்பகல் 11 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

9. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபணையற்ற உரிமையுண்டு.

10. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ரீ. எஸ். சுப்பிரமணியம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1, 15-7-1970.
CT/2/377

7-863—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916.

---

## காணி அபிவிருத்தி அலுவலகம்—திருகோணமலை

**திருகோணமலை காணி அபிவிருத்தி அலுவலகத்தில் உள்ள பாவனைக்குதவாத உபகரணங்களை விலைக்கு வாங்குவதற்கும், எடுத்துச் செல்வதற்குமாகிய கேள்விப்பத்திரங்கள்**

காணி அபிவிருத்தி உத்தியோகத்தர், திருகோணமலையால் பாவனைக்குதவாத உபகரணங்களை வாங்குவதற்கும், எடுத்துச் செல்வதற்குமாகிய கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஆவணி (ஓகஸ்து) மாதம் 14 ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. மேற்படி கேள்விப்பத்திரத்திற்கு முற்பணமாக ரூபா 50 ஐ காணி அபிவிருத்தி அலுவலகத்திலோ அன்றேல் வேறு ஏந்தக் கச்சேரியிலோ கட்டிய பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். பணம் கட்டிய பின்பு ஒரு கிழமை (7 நாட்கள்) தவணைக்கிடையில் மேற்படி பொருட்களை எடுத்துச் செல்ல மறுத்தால் அல்லது ஏற்றிச் செல்லாவிட்டால் ஒப்பந்தக்காரருடைய கட்டுப்பணம் அரசாங்கத்துக்கு சேர்வதும் அன்றி அவர்களுடைய பெயரும் விலாசமும் ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தவறியவர்களினது பட்டியலில் சேர்க்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்பட்டதென்பதை அவர்களால் கொடுக்கப்பட்ட முகவரிக்கோ அல்லது அவரிடம் சேர்க்கப்பட்டாலோ அது கிடைக்கப்பட்டதாகவே கொள்ளப்படும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரகாரர்களினால் பொருட்களை ஏற்றிச் சென்ற பின்பு அதாவது மூன்று நாட்களுக்கு பின்பு அவர்களால் செலுத்தப்பட்ட முற்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. கூடிய தொகையை குறித்தவர்களுக்கே பொருட்களை வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் பதிவுத் தபால் மூலம் " காணி அபிவிருத்தி அலுவலாளர், காணி அபிவிருத்தி அலுவலகம், திருகோணமலை " என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அன்றேல் இவ்வலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடலாம். பதிவு செய்யப்பட்ட தபால் உறையின் இடதுபக்க மேல் பகுதியில் " பாவனைக்குதவாத உபகரணங்களை வாங்குவதற்குரிய கேள்விப்பத்திரம் " எனத் தெளிவாக எழுதப்படல் வேண்டும். இதற்குரிய மாதிரி கேள்விப்பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் வழங்கப்படமாட்டாது.

4. கேள்வியாளர்கள் குறித்த பொருட்களை முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை சாதாரண அலுவலக நாட்களில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் முற்பகல் 11.00 மணி வரைக்கும் போயா தினத்தின் முன்தினம் திருகோணமலை காணி அபிவிருத்தி அலுவலாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம். கேள்விப்பத்திரங்களில் எதையேனும் மாற்றங்கள் செய்யப்பட்டாலோ அல்லது அழித்து எழுதப்பட்டாலோ அவ்விடங்களில் கேள்விப்பத்திரகாரர்களினால் கையொப்பமிடல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஓகஸ்து மாதம் 14 ம் திகதி முற்பகல் 11.00 மணியளவில் எனது அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விப்பத்திரகாரர்கள் விரும்பின் அந்நேரம் சமுகமளிக்கலாம்.

6. திருகோணமலை காணி அபிவிருத்தி அதிகாரி அவர்கட்கு இக் கேள்விப்பத்திரங்களை தள்ளுபடி செய்யவோ அல்லது ஏற்கவோ அல்லது சிலவற்றை மாத்திரம் அல்லது எல்லாவற்றையும் ஏற்கவோ தள்ளுபடி செய்யவோ பூரண அதிகாரமுண்டு.

7. மேலதிக விபரங்களை திருகோணமலை காணி அபிவிருத்தி அதிகாரியை தொடர்பு கொள்ளவும்.

8. பொருட்களின் பட்டியல் இத்துடன் அணைக்கப்பட்டிருக்கின்றன.

ரி. கனகலிங்கம்,
காணி அபிவிருத்தி அதிகாரி,
திருகோணமலை.

காணி அபிவிருத்தி அலுவலகம்,
திருகோணமலை,
5.7.70.

**பொருட்கள் பட்டியல்**

| | | |
|---|---|---|
| 1. | துருத்தி பெரியது | 1 |
| 2. | கதிரை (கையுள்ளது) | 2 |
| 3. | ரோச் லைற் | 2 |
| 4. | 400 கலன் கொள்ளக் கூடிய தண்ணீர் தாங்கி | 2 |
| 5. | கோடரி | 33 |
| 6. | வாச்சி | 2 |
| 7. | வாளி 14" | 4 |
| 8. | வாளி 12" | 7 |
| 9. | வாளி 10" | 10 |
| 10. | பிறஸ் | 10 |
| 11. | பிறஸ் 2" | 2 |
| 12. | கத்தி | 10 |
| 13. | கரம் போட்டு | 2 |
| 14. | யன்னல் கொளுக்கி | 1 |
| 15. | 45" கலன் றம் | 16 |
| 16. | கண்ணாடி வெட்டும் கருவி | 2 |
| 17. | ருவற் போட்டு | 1 |
| 18. | டீ. டீ. ரி. ஸ்ப்றெயர் | 3 |
| 19. | கத்தரிக் கோல் | 1 |
| 20. | அரம் 14" தட்டையானது | 3 |
| 21. | இரும்பு அறுக்கும் வாள் | 5 |
| 22. | மரம் அறுக்கும் வாள் | 1 |
| 23. | அரிக்கன் லாம்பு | 3 |
| 24. | மண வெட்டி | 23 |
| 25. | பெற்றோல்மக்ஸ் லாம்பு | 3 |
| 26. | தாச்சி | 21 |
| 27. | மழைக் கோட்டும் தொப்பியும் | 1 |
| 28. | சார மரம் | 2 |
| 29. | ஸ்ரூல் | 4 |
| 30. | சல்லடை | 2 |
| 31. | திருங்கு 4" | 4 |
| 32. | ரின் 1 கலன் | 1 |
| 33. | மூலை மரம் | 4 |
| 34. | ஆமைப் பூட்டு | 2 |
| 35. | அலவாங்கு | 1 |
| 36. | கல்லு துளைப்பது | 4 |
| 37. | அரம், முக்கோணமுடையது 6" | 1 |
| 38. | பிக்கான் | 12 |
| 39. | தள்ளு வண்டி | 1 |
| 40. | தேடாக்கயிறு | 27 |
| 41. | சாக்கு | 13 யார் |
| 42. | கக்கூஸ் அச்சு | 2 |
| 43. | சீமேந்து கல்லு அச்சு | 18 |
| 44. | மரம் 6"×2"×16' | 1 |

7-924—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

இல. இப/260(69/70)

## காலிக் கச்சேரி—கேள்விப்பத்திரம் சம்பந்தமாக அறிவித்தல்

காலி மாவட்டத்தில் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள அமைப்பு வேலைக்காக 1970 ம் வருடம் ஓகத்து மாதம் 10 ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை கொழும்பு (த. பெ. 500) காணிக் கொமிசனர் திணைக்கள கேள்விச் சபையின் தலைவரினால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அக்கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது அதனைச் சம பித்தோர் அங்கு சமுகமாயிருக்கலாம். காலிமுகத்தில் அமைந்துள்ள செக்ரடேரியட் கட்டிடத்தின் 3 ம் மாடியிலுள்ள காணிக் கொமிசனர் காரியாலயத்தின் 357 ம் இலக்க அறையில் கேள்விப் பத்திரங்களை இடுவதற்கான பெட்டி வைக்கப்பட்டிருக்கும்.

2. காலி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட படிவங்களிலேயே இணைப் பிரதிகளாகக் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வேலை சம்பந்தமாயுள்ள மாதிரித் திட்டத்தை மேற்படி அரசாங்க அதிபரின் காரியாலயத்தில் பார்த்துக் கொள்ளக் கூடியதாயுள்ளதுடன் அது சம்பந்தமான மேலதிக விபரங்களையும் அவரிடமிருந்தே அறிந்து கொள்ளவும் கூடியதாயுள்ளது.

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவ்வேலைக்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு ஒப்பந்த வேலைகளுக்காக அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் அரசாங்க வேலை, நீர்ப்பாசன, கல்வி அல்லது வேறு திணைக்களங்கள் அவ்வேலைக்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ள, இவ்வித வேலைகளைச் சிறந்த முறையில் செய்து முடிப்பதற்குத் திறமை கொண்ட கூட்டுறவு, கிராமாபிவிருத்திச் சங்கங்களும் இவ்வேலைக்காக விண்ணப்பிக்கலாம். ஆனால் அதனையிட்டு மேற்படி அரசாங்க அதிபருக்கு, அவ்வாறு பதிவு பெற்றிருத்தலையும் திறமை சம்பந்தமான அத்தாட்சியையும் ரூபா 100 ஐ கேள்வி வைப்புப் பணமாக வைத்துப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும். 1970 ஓகத்து மாதம் 5 ந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விக்குரிய படிவங்கள் வழங்கப்படும். பதிவு பெற்றுள்ள சங்கங்கள் கேள்வி வைப்புப் பணம் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அவ்வச் சங்கங்களுக்குரிய திணைக்களங்களின் மாவட்டப் பிரதானிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தம் திறமை சம்பந்தமாயுள்ள சான்றுப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இக்கேள்விக்குரிய வைப்புப் பணத்தைக் காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியே வேறெதாவதோர் கச்சேரியில் அல்லது கொழும்புத் திறைசேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " ................ க்கான கேள்விப் பத்திரம் " எனக் குறிப்பிட வேண்டியதுடன் எல்லாக் கேள்விப் பத்திரங்களிலும் கையெழுத்திட்டு முத்திரை (வீல்) வைத்துப் பாதுகாப்பாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

டப்லியூ. எல். ஆர். பீ. த அல்விஸ்,
உதவி அரசாங்க அதிபர்,
காலி மாவட்டம்.

காலிக் கச்சேரி,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 8 ந உ.

**அட்டவணை**

| வேலை விபரம் | அமைந்துள்ள பிரதேசம் | பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| திவுலான குடியேற்றத்துக்குப் பாதை அமைத்தல் | தல்பே பத்துவ .. | 25,000 |

7-765—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916.

---

### கட்டிடப் பகுதி

#### வெற்று சீமெந்து காகித உறைகளை கொள்வனவு செய்து அதை அப்புறப்படுத்தலுக்குரிய கேள்விப் பத்திரங்கள்

வெற்று சீமெந்து காகித உறைகளை கொள்வனவு செய்து அப்புறப்படுத்தலுக்குரிய கேள்விப் பத்திரங்கள் ரத்மலானை, மாலிகாவ வீதியில் உள்ள பிரதம நிர்மாண பொறியியலாளரால் 5.8.70 பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். இவ் உறைகள் அவரது பொருட் சாலையிலும் மற்றைய வேலைத்தலங்களிலும் உள்ளன.

இவரது காரியாலயத்திலோ அல்லது எக் கச்சேரியிலாவது ரூ. 25 கட்டுப்பணம் செலுத்தியதற்காய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து இதற்குரிய படிவங்களை ரத்மலானையிலுள்ள பிரதம நிர்மாணப் பொறியியலாளர் அலுவலகத்தில் 4.8.70 நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இப் படிவங்கள் இரு பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இக்கட்டுப் பணம் கேள்விப் பத்திரத்தில் அடங்கிய விதிகளின்படி திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலும் தேவைப்படும் விபரங்கள் ரத்மலானை பிரதம நிர்மாண பொறியியலாளர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படலாம்.

எச். சி. டி. சில்வா,
பிரதம நிர்மாண பொறியியலாளர்.

மாலிகாவ வீதி,
ரத்மலானை,
கல்கிசை,
16.7.70.

7-947—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்

#### உபயோகமற்ற பொருட்கள் விற்பனை

பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்திற்குரிய உபயோகமற்ற பொருட்களை 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2 மணிக்கு கொழும்பு 2, 48, ஸ்ரீ ஜினரத்தின வீதியிலுள்ள பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்தில் பிரசித்த ஏல விற்பனை செய்யப்படும்.

(2) விற்பனை நாளன்று காலை 10 மணி தொடக்கம் பொருட்களைப் பார்வையிடக் கூடியதாக இருக்கும்.

(3) விற்பனைக்குரிய உபயோகமற்ற பொருட்களின் அட்டவணையை பூகற்ப ஆராய்ச்சிக் கந்தோர் ஆணையாளருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

(4) கொள்வனவு செய்யும் பொருட்களுக்கு உடனடியாகப் பணம் செலுத்தப்பட்டு அன்று மாலை 4.30 க்கு முன் பொருட்கள் வெளியேற்றப்பட வேண்டும்.

எல். ஜே. டி. பர்னாந்து,
ஆணையாளர்,
பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்,
கொழும்பு 2.

14 யூலை 1970.

7-779—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916.

---

### சுங்க ஏலவிற்பனை

1970 ம் ஆண்டு யூலை மாதம் 28 ம் திகதி (28.7.1970) காலை 10.30 மணிக்கு கீழ்க்காணும் பொருட்கள் யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இப்பொருட்களை விற்பனைத் தினத்தன்று (28.7.1970) காலை 9.00 மணி தொடக்கம் 10.30 மணி வரை இவ்வலுவலகத்திற் பார்வையிடலாம். ஏலத்தில் வாங்கும் பொருட்களின் கேள்வி விலையின் 50 சத வீதம் (50%) ஏலம் முடிந்தவுடன் கட்டப்படல் வேண்டும். கேள்வி விலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத்தில் இருந்து ஏழு (7) நாட்களுள் பொருட்கள் எடுத்துச் செல்லப்படல் வேண்டும். சுங்க சேகரிப்பாளர் திருப்திகரமானதாகக் கருதும் கேள்வி விலைகளே ஏற்றுக்கொள்ளப்படும்.

எஸ். எம். ஜே. சேனாரத்ன,
யாழ் மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1969 ம் ஆண்டு யூலை மீ 4 ந உ.

1. 1 அவுட்போட் மோட்டார்
2. 1 அவுட்போட் மோட்டார்
3. 6 வீசிறி அலகுகள்
4. ஒரு தொகை அச்சடித்த படங்கள்
5. ஒரு தொகை பாயகள்
6. ஒரு தொகை ஓலைக்கூடைகள்
7. ஒரு தொகை பொம்மைகள்
8. 6 போத்தல் வாசனைத் தேங்காய் எண்ணெ
9. 1 அவுட்போட் மோட்டார்
10. டோர்ச் லைட்டுகள்
11. நைலோன் நூல்
12. 587 ரின் சக்கரின்
13. 19 மூடை கராம்பு
14. 17 கட்டு நைலோன் வலை
15. 2 மூடை சாதிக்காய் பூ
16. 60 ரின் நெஸ்கபே
17. பித்தளைப் பாத்திரம்
18. ஒரு தொகை காப்புகள்
19. முடி மயிர்
20. வாசனை ஆமணக்கெண்ணெ
21. குங்குமம்
22. கண்மை
23. பிளாஸ்ரிக் பூக்கள்

7–915—24.7.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,916

---

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 1970/71 ம் ஆண்டுக்குரிய துறைவரி மறு விற்பனவு

1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந திகதியிலிருந்து 1971 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந திகதி வரையுள்ள கால எல்லைக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள துறையில் ஆயவரிகள் பெறுவதற்கும் சகல போக உரிமைகளையும் வழங்குவதற்கு மான கேள்விப்பத்திரங்கள் துறைவரி விற்பனவுக்குரிய நிபந்தனைகளுக்குட் பட இத்தால் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தின் சார்பாகவும் எக்கச்சேரியிலாவது ரூபா நூறு (100/–) பிணையாகக் கட்டப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படவேண்டும். அவ்வாறான பற்றுச்சீட்டு காட்டுமிடத்து மட்டக்களப்பு கச்சேரியில் 1970 ம் ஆண்டு ஓகஸ்து மாதம் 22 ந திகதிக்குமுன் வழங்கப்படும் மாதிரிப்பத்திரங்களின் மேலேயே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

" மட்டக்களப்பு மாவட்டத்தில்................(இங்கே துறையின் பெயர் எழுதவும்) துறைவிற்பனவு " என்று இது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு முத்திரை (சீல்) இடப்பட்ட தபால் உறைகளிலேயே ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் கிடைப்பதற்கான கடைசி நேரத்திற்கு முன்னதாக அனுப்பப்படல் வேண்டும்.

1970 ம் ஆண்டு ஓகஸ்து மாதம் 24 ந திகதி கீழே குறிக்கப்பட்ட நேரத்துக்குமுன் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிப்பவர்கள் யாராவது அவ்வேளையில் இக்கச்சேரியில் சமூகம் கொடுக்கவேண்டும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில், கேட்டு விண்ணப்பிக்கும் கொந்தருத்தை திருப்திகரமாகக் கொண்டு நடத்தும் பொருளாதாரத் தகைமையுடையவர்கள் என்பதை உறுதிப் படுத்தும் தமது பிரிவுக்குரிய அரசாங்க அதிபரினுலோ பிரிவுக்காரியாதி காரியினுலோ கொடுக்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பகுதிக்குரிய உதவிக்கூட்டுறவு ஆணையாளரிடம் இருந்து தமது சங்கம் துறையை நடத்தி ஆயவரி அறவிடத்தகுதியுள்ளதென்றும் கேள்விப்பணத்தில் மூன்றில் ஒருபங்கை பிணைப்பணமாகக் கட்டக்கூடிய நிதிவசதியுடையது என்றும் ஓர் அத்தாட்சிப்பத்திரத்தைக் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் அவ்விடத்தில் விற்பனை நிபந்தனை களுக்கிணங்கக் கையொப்பமிட்டு வாங்கிய பெறுதியில் மூன்றில் ஒரு பங்கை பணமாக அரசாங்க அதிபருக்குப் பிணை கட்டவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் விற்பனவு நிபந்தனைகட்கு இணங்கவோ பிணைகட்டுவதற்கோ, பிணைஉறுதிக்கு தொகையைக் கட்டுவதற்கு தவறுமிடத்து அவரினால் கொடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக் கட்டணத்தை அவர் இழந்தவராவார். அத்துடன் அவர் அரசாங் கத்தின்கீழ் எவ்வித கொந்தருத்து வேலைகள் செய்வதிலிருந்தும் தடுக்கப்படுவார். இவ்விதி விலக்கைத் தவிர வேறு தேர்ந்தெடுக் கப்பட்ட கொந்தருத்துக்காரரினால் அல்லது கொந்தருத்துச்காரர் களினால் விற்பனை நிபந்தனைகள் கையொப்பமிடப்பட்டு பிணையும் கொடுக்கப்பட்டபின் மற்றையோரின் கேள்விப்பத்திரப் பணம் மீட்டுக் கொள்ளப்படும்.

எவ்வித காரணமும் காட்டாது எக்கேள்விப்பத்திரத்தையும் அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கான தனியுரிமை அரசாங்க அதிபருக்கே உரித்தாகும்.

தற்போது பாதைகள் வேலை செய்யும் துறைகளுக்குப் பாதைகள் கொடுக்கப்படும். வள்ளங்கள் கிடைக்குமாயின் வள்ளங்கள் கொடுக்கப் படும். அவ்வாறு வள்ளங்கள் கிடைக்காவிடில் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் சேவை திருப்திகரமாக நடைபெறுவதற்காகத் தம்முடைய சொந்த வள்ளங்களையே உபயோகிக்கவேண்டும்.

துறைவரி விதிகளின்படி தபால் கொண்டு செல்லும் சேவகர்களும் அரசாங்க வாகனங்களும் துறைக்கூலி செலுத்தவேண்டியதில்லை. தேர்ந் தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் தபாற் சேவகரிடமிருந்து அரசாங்க வாகனங் களிடமிருந்தும் துறைக்கூலி எற்கக்கூடாது.

மட்டக்களப்புக் கச்சேரிக்கு விண்ணப்பிக்குமிடத்து மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

எட்கார் பெரேரா,
மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.

மட்டக்களப்பு கச்சேரி,
1970 ம் ஆண்டு ஜூலை மீ 9 ந உ.

| துறையின் பெயர் | பெ. இ. உ. பிரிவு | நேரம் |
|---|---|---|
| வெருகல் .. | கோறளைப்பற்று .. | மு.ப. 10.00 |
| பனிச்சங்கேணி .. | ஷை .. | மு.ப. 10.15 |
| கிரான் .. | ஷை .. | மு.ப. 10.30 |
| திமிலதீவு .. | மண்முனை வடக்கு .. | மு.ப. 10.45 |
| வலையிறவு .. | ஷை .. | மு.ப. 11.00 |
| மண்முனை .. | ஷை .. | மு.ப. 11.15 |
| துறைநீலாவணை .. | ம. தெ. எ. போ. பற்று .. | மு.ப. 11.30 |
| அம்பிளாந்துறை .. | ஷை .. | மு.ப. 11.45 |
| குறுமண்வெளி .. | ஷை .. | மு.ப. 12.00 |

7–748—24.7.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,916.

---

## சாராயத் தவறணைக் குத்தகை விற்பனை

### ஹம்பாந்தோட்டை மாவட்டம்—1970/71

ஹம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள்ளிருக்கும் 1 ம் நம்பர் சாராயத் தவறணையில் 1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ம் திகதி வரை சில்லறையாகச் சாராயம் விற்கும் பிரத்தியேக உரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்துவரும் பொது விதிகளுக்கமையவும் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ம் திகதி வெளியாகிய 14,902 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் அடங்கிய விதிகளுக்கமையவும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் எக்கச்சேரியிலும் பெறக்கூடிய அதற்குரிய பத்திரத்தில் ரூபா 3,000/– வைப்புப் பணமாகக் கட்டியபின் பெற்ற பற்றுச்சீட்டுடன் கேள்விப்பத்திரம் கொடுப்பவருக்குரிமையான ஆதாரம், மேற்கூறிய அரசாங்க வர்த்தமானியில் 4 (3) (1) விதிகளின் பிரகாரம், நிரந்தர சொத்து விபரம் பற்றிய ஒரு அத்தாட்சிப் பத்திரம், மாவட்ட காரியாதிகாரியிடம் பெற்று கேள்விப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனது சொந்தப் பெயரில் இருத்தல் வேண்டும். ஏஜண்டுகளின் மூலமாகவோ, அல்லது இலங்கைப் பிரஜையல்லாதவர்கள் அல்லது 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ம் திகதி வெளியாகிய 14,902 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் அடங்கிய 1970/71 ம் ஆண்டுக்குரிய சாராயத் தவறணைக் குத்தகை விற்பனை விதிகளின் 6 ம் பிரிவின் கீழ் விண்ணப்பிக்க அருகதையற்றவர்கள் கோரும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. ஒருவர் ஒரு கேள்விப்பத்திரத்திற்குக் கூடவோ அல்லது ஐந்து பேருக்கு அதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்தோ கேள்விப்பத்திரங்கள் இத்தவறணைக்காகச் சமர்ப்பிக்கக்கூடாது.

5. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் " ஹம்பாந்தோட்டை மாவட்ட 1 ம் நம்பர் சாராயத் தவறணைக் குத்தகை விற்பனை கேள்விப்பத்திரம்—1970/71 " என பொறியிட்ட உறையின் இடது மூலையில் எழுதப்பட்டு கச்சேரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் சேர்க்கப்பட்டோ, அல்லது பதிவுத்தபால் மூலமாக 1970 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன்பாக ஹம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் கோருபவர்கள் அவைகள் மூடப்படும் நேரத்தில் ஹம்பாந்தோட்டை கச்சேரியில் சமுகமளித்தல் வேண்டும். தேவைப்படின் மேலே 3 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள விதிகளின் கீழ் அருகதையற்றவர்கள் அல்ல என்பதை நிரூபிக்க அத்தாட்சிப் பத்திரங்கள் பெற்றிருக்க வேண்டும்.

6. தெரிவுசெய்யப்பட்ட கோருதல்காரர் உடனடியாக குத்தகை விற்பனை ஒப்பந்த விதிகள் அடங்கிய பத்திரத்தில் கைச்சாத்திட்டு அரசாங்க அதிபரால் குறிக்கப்பட்ட தொகையை பிணைப்பணமாகக் கட்டுதல் வேண்டும்.

7. எந்த ஒரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ ஏற்கவோ மறுக்கவோ ஹம்பாந்தோட்டை அரசாங்க அதிபருக்கு உரிமையுண்டு.

8. மேலதிக விபரங்களுக்கு விண்ணப்பஞ் செய்து ஹம்பாந்தோட்டை கச்சேரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். சி. மாணிக்கவாசகர்,
மேலதிக அரசாங்க அதிபர்,
ஹம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

ஹம்பாந்தோட்டை கச்சேரி,
1970 ம் ஆண்டு ஜுலை 6 ம் திகதி.

**அனுமதிக்கப்பட்ட சாராயத்தவறணை ஹம்பாந்தோட்டை மாவட்டம்—1970/71**

| சாராயத் தவறணை இல. | பகுதி | நகரசபை | கேள்விப்பத்திரம் முடிவு நேரம் மு. ப. | தவறணை திறக்கும் நேரம் மு. ப. | தவறணை மூடும் நேரம் பி. ப. |
|---|---|---|---|---|---|
| 1 | ஹம்பாந்தோட்டை நகரசபைப் பகுதி | ஹம்பாந்தோட்டை நகரசபை எல்லைக்குள் | 10.00 மணி | 8.00 மணி | 7.00 மணி |

7–747—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

## 1970/71 ம் வருடத்துக்கு காலி மாவட்ட சாராயத் தவறணைகளைக் குத்தகைக்கு விடுதல்

1970 ஒக்டோபர் மாதம் 1 ந் திகதி முதல் 1971 செப்டம்பர் மாதம் 30 ந் திகதி வரையுள்ள காலத்துள் சாராயம் சில்லறையாக விற்பனை செய்வதன் பொருட்டு, 1970 ஏப்ரில் 17 ந் திகதியையும் 14,902 ம் இலக்கத்தையும் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்ட சாராயத் தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகள், மதுபானத் தீர்வை அனுமதிப் பத்திரம் ஆதியனவற்றிற்கும் அப்போது அமுலிலிருக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சாராயத் தவறணைகளுக்குக் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எவ்வொரு கச்சேரியிலிருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடிய கேள்விப் படிவங்களிலேயே கேள்வியைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடிதத்தில் முத்திரை (ஸீல்) வைக்கப்பட வேண்டியதுடன் அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) தவறணை இலக்கம், பெயர் ஆதியனவற்றைக் குறிப்பிட்டு 1970 ஓகத்து மாதம் 11 ந் திகதி கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளல் முடிவடையும் நேரத்துக்கு முன்னர் காலி அரசாங்க அதிபருக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். அன்றேல் அந்நேரத்துக்குமுன் கச்சேரியில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும்.

3. தமது சொந்தப் பெயரிலேயே கேள்விப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். இலங்கைப் பிரசையல்லாத ஒருவர் அல்லது முகவர் ஒருவரின் மூலமாக அல்லது 1970 ஏப்ரில் 17 ந் திகதியையும் 14,902 ம் இலக்கத்தையும் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானியில் விளம்பரப் படுத்தப்பட்ட 1970/71 ம் வருடத்துக்கு சாராயத் தவறணைகளைக் குத்தகைக்கு விடுதல் சம்பந்தமாயுள்ள நிபந்தனைகளுள் 6ம் நிபந்தனைப் பிரகாரம் தகுதியற்ற ஒருவரால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. ஒருவர் ஒரு தவறணைக்கு ஒரு கேள்விப் பத்திரத்துக்குமேல் சமர்ப்பிக்கக்கூடாது. ஐவருக்கு மேற்பட்டோரும் கூட்டாகக் கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கக்கூடாது.

5. (1) கேள்விக்காரர்கள், தாம் கேள்வியாகக் குறிப்பிடும் தொகைக்கு நூற்றுக்கு 25 வீதத்துக்குக் குறையாத, தமது அசைவற்ற ஆதனங்கள் அமைந்துள்ள பகுதிப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்து அத்தாட்சிப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். இதன் பிரகாரம் கேள்வி வைப்புத்தொகைப் பற்றுச் சீட்டுக்கு மேலதிகமாக சொத்து அத்தாட்சிப் பத்திரமொன்றும் எல்லாக் கேள்விப் பத்திரங்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) பலர் ஒருமித்து ஒரு கேள்விப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கும்போது அவர்கள் கேள்வியாகக் குறிப்பிடும் தொகையின் நூற்றுக்கு 25 வீதத்துக்குக் குறையாத, ஒருவர் அல்லது பலரின் அசைவற்ற ஆதனங்களின் சொத்து அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பதற்கு அவகாசமுண்டு.

(3) இரு தவறணைகளுக்கும் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர்கள் ஒவ்வொரு தவறணைக்கும் வெவ்வேறு சொத்து அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கத்தேவையில்லை. எவ்வாறாயினும் அக்கேள்விக்காரர்களின் சொத்து அத்தாட்சிப் பத்திரம், இரு தவறணைகளுக்கும் கேள்வியாகக் குறிப்பிடும் தொகைக்கு நூற்றுக்கு 25 வீதத்துக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

(4) பகுதிப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட சொத்து அத்தாட்சிப் பத்திரத்தினுள்ளடங்கிய அல்லது அவ்வத்தாட்சிப் பத்திரத்தை வழங்குவதற்கு அடிப்படையாகக் கொண்ட சொத்தை விற்று அல்லது சாட்டுதல் செய்திராவிடின் அப்பத்திரத்தை வழங்கிய திகதியிலிருந்து 5 வருடங்களுக்கு அது செல்மதியாகும். எவ்வாறாயினும் அவ்வித அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும்போது அச்சொத்து விற்று அல்லது சாட்டுதல் செய்யப்படவில்லையென்பதையிட்டுப் பகுதிப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக அத்தாட்சிப் பத்திரமொன்றையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(5) பெற்றுக்கொள்ளப்பட்ட தனி உரிமைக் காலஎல்லை முடிவுறும்வரை அத்தாட்சிப் பத்திரத்துக்குள்ளடங்கிய சொத்தை விற்றல், அடகு வைத்தல், குத்தகைக்கு விடல் அல்லது வேறேதாவதொரு முறையில் உரித்தை மாற்றுதல், தவறணையைக் குத்தகைக்குவிடும் நிபந்தனைகளை அலட்சியம் செய்ததாகக் கணிக்கப்படும்.

(6) கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டவுடன் அதற்குரிய கேள்விக்காரர்கள் குத்தகை நிபந்தனைகளுக்குக் கை யெழுத்திடுவதுடன் மேற்படி நிபந்தனைப் பிரகாரம் அரசாங்க அதிபரினால் விதிக்கப்பட்ட பிணையைப் பணமாகச் செலுத்தல் வேண்டும்.

(7) 1970 ஓகத்து மாதம் 11 ந் திகதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் நிறுத்தப்படும். அங்கு குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் கேள்விக்காரர்கள் கச்சேரியில் சமுகமாயிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் நிறுத்தப்பட்டவுடனேயே எல்லாக் கேள்விப் பத்திரங்களும் திறக்கப்படும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியை உரியவருக்கு அறிவிக்கப்பட்டவுடன் விதிக்கப்படும் பிணைப் பணத்தைச் செலுத்தத் தவறினால் அவர் களால் வைக்கப்பட்ட கேள்விவைப்புப் பணம் உரிமையற்றதெனப் பிரசித்தப்படுத்தப்படுவதுடன் அன்னாரின் பெயர் மதுபானத் தீர்வை அனுமதிப் பத்திரத்துக்குரிய "தவறியோர் பதிவேட்டில்" உட்படுத்தப்படும். இதுபோன்ற சந்தர்ப்பங்களிலன்றி வெற்றிகண்ட கேள்விக்காரர்கள் குத்தகை நிபந்தனைகளுக்கும் கையெழுத்திட்டு உரிய பிணைப் பணத்தைச் செலுத்திய பின்னர் எல்லாக் கேள்விக்காரர்களினதும் கேள்வி வைப்புப் பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

9. ஒரு கேள்விப் பத்திரத்தை அல்லது எல்லாக் கேள்விப் பத்திரங்களையும் எவ்வித காரணமும் காட்டாது நிராகரிக்கும் பூரண உரிமை காலி மாவட்ட அரசாங்க அதிபருக்குச் சாட்டப்பட்டுள்ளது.

10. இது சம்பந்தமான முழு விபரங்களையும் காலிக் கச்சேரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கச்சேரி, காலி,
1970 ந் ஆண்டு ஜூலை மீ 15 ந் உ.

ஜீ. பி. எஸ். யூ. த சில்வா,
காலி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.
காலி அரசாங்க அதிபருக்காக.

அட்டவணை

| தொடர் இல. | தவறணையின் பெயர் | திறக்கும் நேரம் | மூடும் நேரம் | வட்டாரம் | அமைந்துள்ள பிரதேசம் | கேள்வி வைப்புப் பணம் ரூபா | கேள்வி ஏற்றுக் கொள்ளல் நிறுத்தப்படும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கட்டுகொட 1ம் இலக்க சாராயத் தவறணை | மு.ப. 8.00 .. | பி.ப. 7.00 .. | காலி மாநகர சபை | காலி—மாத்தறை வீதி 74½ மைல் கல்லுக்கும் போணவிஸ்டாவுக்கும் இடையில் | 3,500 .. | மு.ப. 10 0 |
| 2 | ஹீனட்டிகல இல. 2 .. | மு.ப. 8.00 .. | பி.ப. 7.00 .. | தல்பே பத்துவ .. | ஹீனட்டிகல கிராமம் | 2,000 .. | மு.ப. 10.30 |

7–959—24.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,916

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர்,** தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகள் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| யூன் | 5. 6.70 | வெள்ளி | 29. 5.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11. 6.70 | வியாழன் | 5. 6.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 6.70 | வியாழன் | 11. 6.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 25. 6.70 | வியாழன் | 18. 6.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| யூலை | 2. 7.70 | வியாழன் | 25. 6.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 10. 7.70 | வெள்ளி | 2. 7.70 | வியாழன் | ந.ப. | 12 00 |
| | 17. 7.70 | வெள்ளி | 10. 7.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 24. 7.70 | வெள்ளி | 17. 7.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 31. 7.70 | வெள்ளி | 24. 7.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| ஓகத்து | 7. 8.70 | வெள்ளி | 30. 7.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி | 7. 8.70 | வெள்ளி | பி. ı. | 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி | 14. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி | 21. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11. 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்ருேபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ட. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந. ı. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. | 3 30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ௵ மார்ச்சு ௴ 5 ஆந் ௳.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.